# பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – 2023
## தமிழ் விடைக்குறிப்பு

| I | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 15X1=15 |
|---|---|---|
| 1. | ஈ) சருகும், சண்டும் | 1 |
| 2. | அ) அங்கு வறுமை இல்லாததால் | 1 |
| 3. | இ) உழவு, ஏர், மண், மாடு | 1 |
| 4. | அ) கருணையன், எலிசபெத்துக்காக | 1 |
| 5. | ஈ) இலா | 1 |
| 6. | அ) அருமை + துணை | 1 |
| 7. | ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை | 1 |
| 8. | ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன் | 1 |
| 9. | அ) நான்கு, ஐந்து – ச, ரு | 1 |
| 10. | இ) மரபு வழுவமைதி | 1 |
| 11. | ஆ) வினையெச்சத்தொடர் | 1 |
| | **பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க** | |
| 12. | ஈ) சிலப்பதிகாரம் | 1 |
| 13. | அ) பகர்வனர் : பட்டினும் | 1 |
| 14. | ஆ) நெசவாளர் | 1 |
| 15. | இ) அகிலும்: சந்தனமும் | 1 |

**பகுதி – II**
**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4X2=8**
**வினா எண் 21ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்**

| | | |
|---|---|---|
| 16. | **தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள்**<br>➢ வரகு<br>➢ காடைக்கண்ணி<br>➢ குதிரைவாலி | 1<br>1 |
| 17. | **விடைக்கேற்ற வினா அமைக்க**<br>அ) பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் **யார்?**<br>ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது **எது?**<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br>1 |
| 18. | **சதாவதானம்**<br>ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் கொண்டு விடையளித்தலே 'சதாவதானம்' எனப்படும். | 2 |
| 19. | **மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம்**<br>➢ அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்.<br>➢ அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள். | 1<br>1 |
| 20. | **அவையம்**<br>❖ அறம் கூறும் மன்றங்கள் **அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.**<br>❖ புறநானூறு **"அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்"** என்று இவை பற்றி குறிப்பிடுகிறது.<br>❖ **உறையூர் அறஅவையம் தனிச் சிறப்புப்பெற்றது** என்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>❖ மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்று **மதுரைக்காஞ்சி** குறிப்பிடுகிறது.<br>**(ஏதேனும் இரண்டு கருத்துக்கு மதிப்பெண் வழங்குக)** | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 21. | **திருக்குறள்**<br>செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல் | **2** |

**பிரிவு - 1**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5X2=10**

| | | |
|---|---|---|
| 22. | **ஊர்ப்பெயர்களின் மரூஉ**<br>அ) உதகை ஆ) நெல்லை இ) சைதை ஈ) குடந்தை | **1/2** |
| 23. | பழமொழி<br>அ) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.<br>ஆ)அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு | **1**<br>**1** |
| 24. | பகுபத உறுப்பிலக்கணம்<br>ஒலி + த் + த் + உ<br>ஒலி - பகுதி த் - சந்தி த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | **1**<br>**1** |
| 25. | கலைச்சொல்<br>அ) காப்புரிமை<br>ஆ) புயல்<br>**(செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா)**<br>மணிமேகலை, பொன்மணி, பூந்தேன், பொன்விளக்கு, விண்மழை<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | **1**<br>**1** |
| 26. | தொகைநிலைத் தொடர்<br>அ) இருபெயரொட்டு பண்புத்தொகை<br>ஆ) வினைத்தொகை | **1**<br>**1** |
| 27. | தொடரில் அமைக்க<br>அ)வளவன் தான் பெரிய கோடிஷ்வரனாக வரவேண்டும் மனக்கோட்டைக் கட்டினான்.<br>ஆ) தாய் தன் குழந்தையை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | **1**<br>**1** |
| 28. | குறள்வெண்பா<br>➢ வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளைக் கொண்டதாய் வருவது.முதல் அடியில் நான்கு சீரும் இரண்டாம் அடியில் மூன்று சீரும் வரும். (எ.கா.)<br>➢ செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல் | **1**<br>**1** |

**பகுதி –III பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2X3=6**

| | | |
|---|---|---|
| **29.** | **சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே**<br>**1.அறத்தில் வணிகம் கூடாது:**<br>எதிர்பார்ப்போடு பிறருக்கு உதவக்கூடாது. கைமாறு கருதாத உதவியே அறம்.<br>இது இன்றைய காலத்தேவை.<br>**2. கொடை:**<br>செல்வத்துப் பயனே ஈதல் என்கிறது சங்க இலக்கியம்.<br>இன்று பிறர்க்கு ஈகைக் குணம் குறைந்துவிட்டது. இது அதிகரிக்க வேண்டும்.<br>**3.பொய்யாச் செந்நா** – என்பது சங்க இலக்கியச் சூழலுக்கு ஏற்ப மனிதன் மாறுகிறான். பொய்யர்கள் மிகுந்துவிட்டனர். எனவே நற்றிணை கூறும் பிழையா நன்மொழியை நாம் கடைபிடிக்க வேண்டும். | **1**<br>**1**<br>**1** |

| | | |
|---|---|---|
| 30. | **பத்தியைப் படித்து விடையளிக்க**<br>அ) "போலச் செய்தல்"<br>ஆ) புரவி ஆட்டம், புரவி நாட்டியம்<br>இ) மராட்டியர் | <br>1<br>1<br>1 |
| 31. | **சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும்**<br>சோலைக்காற்று : என்னைப்போல இதமான காற்றை உன்னால் தர முடியுமா?<br>மின்விசிறிக்காற்று : ஏன் தர முடியாது? மெதுவாகவும் வீசுவேன் வேகமாகவும் வீசுவேன்<br>சோலைக்காற்று : ஏன்! நானும் மெதுவாகவும் வீசுவேன், வேகமாகவும் வீசுவேன்<br>மின்விசிறிக்காற்று : என்னால் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படாது.<br>சோலைக்காற்று : நான் அப்படி ஒன்றும் மனிதர்களுக்குத் தீங்க செய்ய நினைப்பதில்லை.<br>மின்விசிறிக்காற்று : வீடுகட்டி வசதியாக வாழ்பவர்களுக்கு நான் தான் வீட்டை அணி செய்கிறேன்.<br>சோலைக்காற்று : ஆனாலும் நாம் இருவருமே மனிதர்களுக்க முக்கியம்<br>மின்விசிறிக்காற்று : ஆம், நாம் இணைந்து மனிதர்களுக்கு இதமளிப்போம்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 1<br><br>1<br><br>1 |

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2X3=6**

| | | |
|---|---|---|
| 32. | **சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது - இடம் சுட்டிப் பொருள் தருக.**<br>**இடம்** : நாகூர் ரூமி எழுதிய சித்தாளு என்னும் கவிதையில் உள்ளது.<br>**பொருள்** : தொழிலாளர் மனச் சுமையைச் செங்கல் அறியாது.<br>**விளக்கம்** : மனச்சுமையைத் தலைச்சுமை அறியாதது போல, உலகில் பிறர் துன்பம் பற்றி உணராதவர்கள் பலர் உள்ளனர். | 1<br>1<br>1 |
| 33. | **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கு**<br>**தமிழ் :**<br>• தமிழ், இயல் இசை நாடகம் என **முத்தமிழாய்** வளர்ந்தது.<br>• முதல் இடை கடை ஆகிய **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது.<br>• ஐம்பெருங்காப்பியங்களை **அணிகலன்களாகப்** பெற்றது.<br>• சங்கப் பலகையில்அமர்ந்திருந்த **சங்கப்புலவர்களால்** காக்கப்பட்டது.<br>**கடல் :**<br>• கடல், **முத்தினையும் அமிழ்தினையும்** தருகிறது.<br>• வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய **மூன்று வகையான சங்குகளைத்** தருகிறது.<br>• மிகுதியான **வணிகக் கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது.<br>• தன் அலையால் **சங்கினைத் தடுத்து நிறுத்திக்** காக்கிறது.<br>இவ்வாறு தமிழழகனார் தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கூறுகிறார். | 1 1/2<br><br>1 1/2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 34. | **நீதி வெண்பா**<br>**- கா.ப. செய்குதம்பிப் பாவலர்**<br>அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி<br>மருளை அகற்றி மதிக்கும் தெருளை<br>அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்<br>பொருத்துவதும் கல்வியென்றே போற்று. | 3 |
| | **அல்லது** | |
| | **காலக்கணிதம்**<br>மாற்றம் எனது மானிடத் தத்துவம்;<br>மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!<br>எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை<br>என்ப தறிந்து ஏகுமென் சாலை!<br>**- கண்ணதாசன்** | 3 |

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2X3=6**

| | | |
|---|---|---|
| 35. | **தொகைநிலைத்தொடர் வகைகள்**<br>மல்லிகைப்பூ - இருபெயரொட்டு பண்புத்தொகை<br>**மல்லிகை ஆகிய பூ**<br>பூங்கொடி - உவமைத்தொகை<br>**பூ போன்ற கொடி**<br>ஆடு மாடு - உம்மைத்தொகை<br>**ஆடுகளுக்கும் மாடுகளுக்கும்**<br>தண்ணீர்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை<br>**தண்ணீரை உடைய தொட்டி**<br>குடிநீர் - வினைத்தொகை<br>**குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர்**<br>சுவர்க்கடிகாரம் - ஏழாம் வேற்றுமைத்தொகை<br>**சுவரின்கண் கடிகாரம்**<br>மணி பார்த்தாள் - இரண்டாம் வேற்றுமைத்தொகை<br>**மணியைப் பார்த்தாள்**<br>(ஏதேனும் மூன்று எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக) | 1<br>1<br>1 |
| 36. | **பயின்று வரும் அணி** : உவமை அணி<br>**அணி விளக்கம்** :<br>உவமானம், உவமேயம் இரண்டனுக்கும் இடையில் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.<br>**அணிப்பொருத்தம்** :<br>அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது – **உவமேயம்**<br>வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வது – **உவமை**<br>போலும் – **உவம உருபு** | 1<br>1<br>1 |
| 37. | அலகிட்டு வாய்பாடு<br>(அட்டவணை கீழே)<br>**இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.** | 2<br>1 |

| | | |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய் /யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன் /னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 38. அ) | முல்லைப்பாட்டில் உள்ள கார்காலக் காட்சிகள்<br>மழைக்காட்சி<br>➢ அகன்ற உலகத்தை வளைத்து பெருமழை பொழிகிறது.<br>➢ அம்மேகம் ஒலி முழங்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு போன்றுள்ளது மழை மேகம்.<br>நற்சொல் கேட்டல்<br>➢ துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில் முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.<br>➢ முலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர்.<br>➢ பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.<br>தலைவியே வருந்தாதே<br>➢ இடைமகள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டி வர இப்போது வந்து விடுவர்" என்றாள்.<br>➢ இது நல்ல சொல் எனக் கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் "நற்சொல்லை நாங்கள் கேட்டோம்" என்று கூறினர். | 5 |
| | **அல்லது** | |
| ஆ) | **வள்ளுவம் சிறந்த அமைச்சருக்கு கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துகிறது:**<br>• சிறந்த அமைச்சருக்குக் கருவி, காலம், வலிமை, குடிகாத்தல், ஆட்சிமுறை, நூலறிவு, விடாமுயற்சி ஆகியவை வேண்டும். இவற்றைப் பெற்றால் வாழ்வில் வெற்றி பெறலாம்.<br>• .நூலறிவோடு உலகியல் அறிவும் அமைச்சர்களுக்கு வேண்டும் என்கின்றார் வள்ளுவர்.<br>நாமும் இவை இரண்டையும் பெற்றால்தான் சிறப்பாக வாழமுடியும். | 5 |
| 39. அ) | **அ) உறவினருக்குக் கடிதம்**<br>➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| | அல்லது | |
| ஆ) | **சுகாதார ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம்**<br>➢ அனுப்புநர்<br>➢ பெறுநர்<br>➢ விளித்தொடர்<br>➢ பொருள்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ இடம்<br>➢ நாள்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| 40. | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**<br>(பொருத்தமான தலைப்பு எழுதி, கவிதை வடிவில் எட்டு வரிகளுக்கு குறைவில்லாமல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | 5 |

41. **நூலக உறுப்பினர் படிவம்** — 5

கொடுக்கப்பட்ட விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக.

42. அ) **பள்ளியிலும் வீட்டிலும் உனது செயல்கள்** — 5

| **பள்ளியில் நான்** | **வீட்டில் நான்** |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன் | வகுப்பில் நடக்கும் பாடங்களை வீட்டில் மறுபடியும் படிப்பேன். |
| ஆசிரியர் பாடம் எடுக்கும்போது கவனிப்பேன் | பொருள்களை முறையாக அதற்குரிய இடத்தில் வைப்பேன். |
| ஒழுக்கம் நிறைந்த மாணவனாக இருப்பேன் | ஆதிகாலையில் எழுந்து பாடங்கைளைப் படிப்பேன். |
| ஆசிரியரைப் மதிப்புடன் பார்ப்பேன். | பெற்றோரை மதிப்புடன் நடத்துவேன். |

**(பொருத்தமான ஐந்து கருத்துகளுக்கு முழு மதிப்பெண் வழங்குக)**

**அல்லது**

ஆ) **மொழிபெயர்ப்பு** — 5

- ➢ தமிழ்நாட்டில் உள்ள சங்கத்தமிழ் இலக்கியங்களில் ஐந்து புவியியல் பிரிவுகள் உள்ளன.
- ➢ அவற்றுள் மருத நிலமே சாகுபடிக்க ஏற்ற வளமான நிலப்பரப்பைக் கொண்டது.
- ➢ உழவர்களின் வளமை சூரிய ஒளி, பருவகால மழை, மண்வளம் முதலியவற்றை நம்பியிருந்தது.
- ➢ பழங்காலத் தமிழர்களின் கணிப்புப்படி இந்த அனைத்து இயற்கை உறுப்புகளிலும் சூரிய ஒளியே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா**

5

1. கோடை
2. புனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று என அழைக்கப்படுகிறேன்.
3. குடக்கு
4. வடக்கு
5. காற்று**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**

## பகுதி -V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 3X8=24

43. அ) **விருந்தோம்பல்** — 8

♣ எங்கள் இல்லத்திற்கு எங்களது மாமா குடும்பத்தினர் வருகை புரிந்தனர்.

♣ மாமா குடும்பத்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்றோம்.

♣ தேநீர் எடுத்து வந்து என் அம்மா கொடுத்தார்.

♣ மாமா குடும்பத்தினர் தங்குவதற்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டது.

♣ காலை உணவருந்த சாப்பாட்டு அறைக்கு அழைத்து நாங்களே அருகில் இருந்து பரிமாறினோம்.

♣ பல நிகழ்ச்சிகளைப்பற்றி உரையாடி மகிழ்ந்தோம்.

♣ பிற்பகல் உணவாக என் அம்மா சைவமும், அசைவமும் என தனித்தனியே சமைத்திருந்தார்.

♣ விருந்தினரின் மனம் உவகையில் நிறைந்ததால் நாங்களும் பெருமகிழ்ச்சி கொண்டோம்.

**( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக )**

| | | |
|---|---|---|
| | அல்லது | |
| ஆ) | **சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிடுதல்** | 8 |

| மருவூர்ப்பாக்க வணிக வீதி | இக்கால வணிக வளாகம் |
|---|---|
| தனித்தனித் தொழில், கைத்தொழில் வீதி | கைத்தொழில் வீதி ஒரே வீதியில் எல்லாப் பொருட்களும் இல்லை |
| கூலக்கடைத் தெருக்கள் | தனித்தனி அங்காடிகள் |
| நேரடி வணிக முறை | இடைத்தரகர் வணிக முறை |
| மனிதநேயம் மிக்கது | வணிக நோக்கம் |
| உற்பத்தியாளர், விவசாயிகள் கையில் | வியாபாரிகள் கையில் |
| தரம் உண்டு, விலை குறைவு | முறையான விலை இல்லை |

44. அ) **கற்கை நன்றே கற்கை நன்றே** — 8

♣ கறுப்பினக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி மேரி.

♣ அம்மா சாம், அம்மா பாட்ஸி மற்றும் குடும்பத்தில் உள்ள எல்லோருமே பருத்தித் தோட்டத்தில் வேலைசெய்பவர்கள்.

♣ வெள்ளை முதலாளியின் வீட்டில் மேரியை விளையாட அழைத்தனர்.

♣ விளையாடிக் கொண்டிருந்த மேரி மேஜையில் இருந்த புத்தகத்தை எடுத்தாள்.

♣ உன்னால் படிக்க முடியாது என்று கூறி புத்தகத்தைச் சிறுமி பிடுங்கினாள்.

♣ அந்நிகழ்வு மேரியின் மனதில் எப்படியாவது படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

♣ வாசிக்க, எழுத கற்றுக் கொள்ள வேண்டும் என்று மேரி தனக்குத்தானே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள்.

♣ மேரிக்கு படிக்க வாய்ப்புக் கொடுத்தாள் மிஸ்வில்ஸன்.

♣ பட்டம் பெற்றாள். அதுவே கறுப்பின மக்கள் மத்தியில் மேரிஜேனை தலைநிமிர வைத்தது.

**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)**

அல்லது

ஆ) **புயலிலே ஒரு தோணி** — 8

- **வருணனை**
  மேகப்பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுதி நின்றன. கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- **அடுக்குத்தொடர்கள்**
  அருவியருவி குதிகுதித்து இருட்டிருட்டு
- **ஒலிக்குறிப்புச் சொற்கள்**
  கடலலை அடிக்கிறது. இடி முழக்கம். முனகல்
- **புயலில் தோணி படும்பாடு**
  தோணியை மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன. கடல், வெறிக் கூத்தாடுகிறது. தோங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு என நொறுங்குகிறது.
  **(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள்**

| | | |
|---|---|---|
| | **எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | |
| 45. அ) | **அரசுப் பொருட்காட்சி**<br>➢ முன்னுரை<br>➢ அரசுப் பொருட்காட்சி அமைவிடம்<br>➢ பல்வித அரங்கங்கள்<br>➢ நடைபெற்ற நிகழ்ச்சிகள்<br>➢ அடைந்த உணர்வுகளும் நன்மைகளும்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | **8** |
| | **அல்லது** | |
| ஆ) | **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**<br>➢ முன்னுரை<br>➢ கொரோனா பெருந்தொற்று<br>➢ தடுப்பு நடவடிக்கைகள்<br>➢ விழிப்புணர்வு செயல்பாடுகள்<br>➢ நமது கடமைகள்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | **8** |

**சுந்தரராஜன் மா**
**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**
9566585860
ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,
பொட்டனேரி, சேலம் - 636453.

**ஜெமி வினா**
**வங்கி - தமிழ்**